மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 401, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அனுமதியில்லாமல் எழுந்திருக்கக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் எத்தனை முறை கை தூக்கினாலும் நேரம் இருந்தால்தான் வாய்ப்புக் கொடுக்க முடியும். (குறுக்கீடு) அனுமதி இல்லை, இதில் எல்லாம் நீங்கள் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் எல்லாம் நீங்கள் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் அதையெல்லாம் கேட்கக்கூடாது. (குறுக்கீடு) இதுமாதிரி கேட்டால் நான் கடுமையாக நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) இது முறையல்ல. உட்கார்ந்துகொண்டு இதுபோல் பேசவும் கூடாது.*

வினா வரிசை எண் 401, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

401—

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

***5558—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசுமை வேதியியல் மூலமாக சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பசுமை வேதியியல் மூலமாக சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகளை மாசுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளச் செய்வதுடன், பசுமை வேதியியல்–*Green Chemistry *மூலப்*

2013 மே 6]

பொருட்களை பயன்படுத்துவதன்மூலம் தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்பினால் எரிசோடா, சிமென்ட், கந்தக அமிலம், மரக்கூழ் மற்றும் காகிதம் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. மேற்படி, செயலாக்கப் பணிகள் பல ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளதால், இக்கேள்வி எழ வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முடியாது என்ற சொல் எனது அகராதியிலே இல்லை" என்று சொன்ன மாவீரன் நெப்போலியனைப் போல, (மேசையைத் தட்டும் ஒலி) "இல்லை என்ற சொல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அகராதியிலும், ஆட்சியிலும் இல்லை" என்ற அந்த இலக்கணத்தின்படி (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இப்போது பூமி வெப்பமாகிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகளின் மூலமாக, காற்றின் மூலமாக, புகையின் மூலமாக மற்றும் ஏனைய இதர துர்நாற்றங்களின் மூலமாகவும் ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகள் போன்றவை எல்லாம் மாசுபட்டு, அந்தப் பகுதிகளில் மாசு ஏற்படுவதினால் நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டு, குடிநீரும் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் பசுமை வேதியியல் மூலமாக ஒரு வேதிப் பொருளை உற்பத்திச் செய்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2013 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நீர்நிலைகளில் நீரின் தன்மையினைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. புகை, காற்று மண்டல மாசினைக் கட்டுப்படுத்தும்பொருட்டு, அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலை புகைப் போக்கிகளிலிருந்து வெளியேறும் புகையைச் சுற்றியுள்ள காற்றின் தன்மையைக் கண்காணிக்கும்பொருட்டு, வாரியத் தலைமை அலுவலகத்தில் ஒரு தொடர் காற்று கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டு, வாரத்தின் 7 நாட்களும், தொடர்ந்து 24 மணி நேரமும் முழுமையாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு, மாசுக் கட்டுப்பாடு வாரியம் முனைப்போடு செயல்பட்டு வருகிறது. ஆங்காங்குள்ள நீர்நிலைகளில் தொடர்ந்து மாசு ஏற்பட்டால் உடனடியாக அந்தந்த மாவட்டத்திற்குட்பட்ட மாவட்டப் பொறியாளர்களுடன் தொடர்புகொண்டு, உடனே அதனைத் தடுக்கும்பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கும் எனது நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 402 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 403, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.